DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 65/2017 |
| Deposition of witness | : | P.W– 2 |
| Name | : | பாலச்சந்திரன் |
| Father's /Husband Name | : | குஞ்சு |
| Village | : | இஞ்சிக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 63 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09th day April 2024.
Accused produced from Judicial Custody.

**முதல் விசாரணை:–**

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பத்தை கடந்த 12.05.2016–ம் தேதி ராமமூர்த்தி என்பவரது வீட்டில் திருட்டு போனது சம்பந்தமாக பேரளம் போலிசார் மதியம் 01.30 மணியளவில் வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னை இருக்க சொன்னார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் ஆனந்த் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தேன். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

அ.சா.1 எனது உறவினர் என்றால் சரிதான். எனது திருமண நாள் நினைவில்லை. நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தை படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. நான் கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேனா என்றால் இல்லை வீட்டு அருகே வைத்து

செய்ததகா ஞாபகம். ராமமூர்த்தி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 65/2017 |
| Deposition of witness | : | P.W- 3 |
| Name | : | ஆனந்த் |
| Father's /Husband Name | : | கோவிந்தராஜன் |
| Village | : | இஞ்சிக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 56 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09th day April 2024.
Accused produced from Judicial Custody.

**முதல் விசாரணை:-**

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பத்தை கடந்த 12.05.2016-ம் தேதி ராமமூர்த்தி என்பவரது வீட்டில் திருட்டு போனது சம்பந்தமாக பேரளம் போலிசார் மதியம் சுமார் 01.00 மணியளவில் வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னையும், பாலச்சந்தர் என்பவரையும் இருக்க சொன்னார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் பாலச்சந்தர் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

நான் பேரளம் பேரூராட்சி தலைவராக இருந்தேன் என்றால் சரியல்ல எனது மனைவி தான் இருந்தார். நான் கட்சியில் முக்கிய நபர் என்றால் சரிதான். எந்த வழக்காக இருந்தாலும் என்னை காவல் நிலையம் அழைப்பார்கள் என்றால் ஊர்க்காரர்கள் அழைத்தால் செல்வேன். ராமமூர்த்தி புகார் தொடர்பாக காவல் நிலையம் அழைத்தார் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் சரியல்ல வீட்டில் வைத்து செய்தேன். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஓம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.